முருகப்பெருமான் துணை

**மகான் நமிநந்தி அடிகள் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.08.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. அருட்தயவு காட்டும் அரங்கா
அண்ணலாய் வந்த தேசிகா
அருட்சுடரேற்றி மக்களிடை
ஆன்மீகம் வளர்க்கும் தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசிபட சுபகிருது நள்ளி திங்கள்
அய்நான்கீர் திகதி கதிரோன் வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 22 நாள், 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் நமிநந்தி அடிகள் தானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
வாராந்திர ஞானிகள் பூசையும்
வழுவாது அன்னதான சேவையும்
4. சேவையும் உலகோர் செய்துவர
சிந்தை தெளிவு திடமுடன்
அவனியில் அழியாமை எனும்
ஆற்றலும் ஞானமும் கண்டு தேறுவர்
5. தேறுவர் அரங்கமகான் வழி
திருவருள் பெற்ற மக்களாய்
ஆறுமுகனார் வழிபாட்டை செய்துமே
அகிலத்தார் தொடர்ந்து வருக
6. வருகவே வறுமை விலகும்
வதைக்கும் பேரிடரும் அகலும்
தருமம் எங்கும் தழைத்துமே
தனித்துவம் மக்கள் அடைவர்
7. அடையவே இயல்புநிலை மாறி
ஆன்மீக பலம் கொண்டவராக
தடைகளை எல்லாம் வெல்பவராக
தரணியை காப்பவராக மாறுவர்
8. மாறவே இந்தப் பேருலகம்
மகான்கள் வழிகாட்டலினால்
கூறவே சைவ நெறிக்கு வந்து
குருவரங்கன் உபதேசங்கள்வகை
9. வகைதனில் எல்லா சக்திகளும்
வரமாகக் கிட்டி இனிதே
பகை மாயை ருணமிடரில்லா
பாதுகாப்பை கொண்ட பூமி ஆக

10. ஆகவே உலக மாற்றம் தானும்
ஆறுமுகன் தலைமை கொண்ட
செகமாக சித்திபலமாகக் கூடி
செப்பிடுவேன் அற்புதம் நடக்கும்

11. நடக்கவே ஞானிகள் பூசை
ஞானபண்டிதன் பூசையாக மாறி
இடரின்றி ஞானஆட்சி மலரும்
இயம்பிய அருளாசி முற்றே

—சுபம்—